

The Bible Standard

"உமது வெளிச்சத்தையும் உமது சத்தியத்தையும் அனுப்பியருளும் அவைகள் என்னை நடத்தும்." சங். 43:3

"LIFT UP A STANDARD FOR THE PEOPLE"
Isaiah 62 : 10

B.S. 744

பொருளடக்கம்

எப்படி? ஏன்? கிறிஸ்துவானவர் சிலுவையில் அறையப்பட்டார்? 2

நமது வருடாந்திர பஸ்கா 9

அறிவிப்பு 12

BS Tamil Version - 9 மார்ச் 2011

எப்படி? ஏன்? கிறிஸ்துவானவர் சிலுவையில் அறையப்பட்டார்?

How and why Christ was crucified ?

இந்தப் பத்திரிக்கையில் மிகவும் அதிசயமான சம்பவமான இயேசுவானவர் சிலுவையில் அறையப்பட்டதைப் பற்றியும், கிறிஸ்துவைப் பின்பற்றுகிறவர்கள், யூதர்கள் மற்றும் பொதுவாக மனுக்குலமனைத்துக்கும் உள்ள அதனுடைய சம்பந்தங்களையும் பற்றி விசேஷித்த கவனம் செலுத்துகிறோம்.

இயேசுவானவரின் மரணத்தை நினைவுகூர்வது வெகுகாலமாகவே கிறிஸ்தவர்களின் வழக்கமாக இருந்து வருகிறது. ஒரே நேரத்தில் துன்பத்தையும், நம்பிக்கையையும் தருகிற ஒரு நினைவுகூருதலாக அது இருக்கிறது. இப்போது நாம் காணப்போவது போல அவருடைய மரணம் நம்பிக்கை அளிக்கிற ஒரு நிகழ்ச்சியாகும். அந்த நேரத்தில் அவருடைய சீஷர்களின் இருதயத்தில் கவலை, வருத்தம், தனிமை ஆகியவை மேலோங்கியிருந்தது. வருங்கால பாக்கியத்திற்குரிய நம்பிக்கையை தம்முடைய மரணத்தால் இயேசு எவ்வாறு நிச்சயப்படுத்தினார்? அதிலிருந்து உலகம் முழுவதும் முடிவில் எப்படி பயனடையும்?

✝ ***நமது கர்த்தரின் ஞாபகார்த்தம் 2011-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 15-ம் தேதி வெள்ளிக் கிழமை மாலை 6 மணிக்குப் பின்பு அனுசரிக்க வேண்டும். 2011, ஜனவரி பெப்ருவரி மாதப் பத்திரிக்கையில் இந்த நாளைக் கணக்கிடும் முறையைக் காணலாம்.***

இந்த ஞாபகார்த்தத்தில் பங்கு கொள்கிறவர்களை தேவன் ஆசீர்வதிப்பாராக. பின்வருகிற கட்டுரைகள் உங்களுடைய கவனத்தை நம்முடைய கர்த்தர் மீதும் அவருடைய தியாக பலியின்மீதும் குவியச் செய்ய வேண்டும் என நாங்கள் ஜெபிக்கிறோம்.

நமது கர்த்தருடைய சிலுவை மரணம் நம்முடைய ஆத்துமாக்களை அனுதாபத்தால் தூண்டி எழுப்புகிற மனதுருக்கத்தோடு சம்பந்தப்பட்ட சம்பவமாகும். மற்றவர்களும் அதைப் போலவே கொடூரமாக மரணமடைந்திருக்கிறார்கள். வேறுசிலர் தாமாகவே மனமுவந்து அமைதியாக மரித்திருக்கிறார்கள். இருந்தாலும் நமது கர்த்தரின் மரணம் முதன் முதலில் குற்றஞ்சாட்டப்பட்ட நபர் முற்றிலும் மரணத்துக்குப் பாத்திரவானாக இல்லாதிருந்த ஒன்றாகும். ஆகவே அவர் ஒருவர் மாத்திரமே தாம் மரணமடைந்த காரியத்தில் முற்றிலுமாக தம்மைத்தாமே மனமுவந்து செய்ததாகும். அவர் ஒருவர் மாத்திரமே தாம் விரும்பாத பட்சத்தில், மரணமடைய வேண்டிய அவசியமில்லை.

சுவிசேஷகர்கள் மிகவும் சிறிய வேறுபாடுகளுடன் சிலுவை மரணம் சம்பந்தப்பட்ட நிகழ்ச்சிகளை விவரிக்கிறார்கள். அவைகள் ஒவ்வொன்றும் உண்மையானது. சொல்லப்பட்ட விஷயங்களை நாம் முறையாகத் தொகுத்தால் முழு விஷயமும் நமக்கு முன்பாக இருக்கும். யூதர்களின் தவறான எண்ணத்தையும், அவர்கள் கூக்குரலிட்டுக் கேட்ட உரிமைகளின் அலையையும் தடுக்க முடியாமல் இயேசுவை சிலுவையில் அறைய பிலாத்து சம்மதித்தான். பின்பு நூற்றுக்கதிபதி மூன்று போர்ச்சேவகர்களுடன் பிலாத்துவின் நியாயஸ்தலத்திலிருந்து இயேசுவை சிலுவையிலறைய கல்வாரிக்கு நடத்திச் சென்றான். வழக்கத்தின்படி குற்றவாளி, இந்தக் காரியத்தில் பலியாக்கப்பட்டவர், தம்முடைய சிலுவையைத் தாமே சுமந்தார். இது எல்லையில்லா துன்பந்தருகிற கொடூரமாயிருந்தது. நமது கர்த்தர் சிலுவையின் பாரத்தால் தொய்ந்து போனது தெளிவாய்த் தெரிந்தது. அப்போது அங்கு வந்து கொண்டிருந்த சீமோன் என்னும் பேருடைய சீரேனே கிராமத்தானை

COURTESY BY :
THE BIBLE STANDARD -(ISSN: 1556-8555) Publisher, the **Laymen's Home Missionary Movement-Bible Standard Ministries,** 1156 St. Matthews Road, Chester Springs, PA, 19425-2700, U.S.A. **Editor**, Ralph M. Herzig. Periodicals Postage paid at Kutztown, PA. **Postmaster:** Send address corrections to The Bible Standard, 1156 St. Matthews Road, Chester Springs, PA, 19425-2700; **Rates**: **One year's subscription** - $ 12.00 (6 issues); single issues-$2.50 each. **Web Site:** *www.biblestandard.com*

அவருக்கு உதவி செய்யும்படி பலவந்தப்படுத்தினார்கள். சீமோன் முழுவதுமாக சிலுவையை சுமக்கவில்லையென்றும் வழக்கமாகத் தரையில் இழுப்படும் அதன் அடிப்பாகத்தைச் சுமந்து இயேசுவுக்கு உதவினார் என்றும் லூக். 23 : 26-ம் வசனம் குறிப்பிடுகிறது.

பேதுருவும், யோவானும், யாக்கோபும் ஆண்டவருடைய பாரத்தைப் பார்த்து, தாங்களாக உதவிசெய்ய ஓடிவராமல் எங்கே போய்விட்டார்கள்? என்று நாங்கள் பலமுறை ஆச்சரியப்பட்டதுண்டு. சிலுவையைச் சுமப்பதில் ஆண்டவருக்கு உதவி செய்யும் சிலாக்கியம் பெற்ற சீமோன் பேரில் அதற்காகப் பொறாமைப்பட விரும்பினால், கர்த்தருடைய சகோதரர்களில் அநேகர் தினந்தோறும் அடையாளமான சிலுவைகளை சுமந்து கொண்டிருக்கிறார்கள் என்றும், அவர்களுக்கு உதவி செய்வது நமக்குக் கிடைத்த சிலாக்கியம் என்றும், உண்மையாய் தம்மைப் பின்பற்றி நடப்பவர்களுக்குச் செய்யப்பட்ட எந்த ஊழியத்தையும், தமக்கே செய்யப்பட்டதாக எண்ணுவதாக, ஆண்டவர் ஏற்றுக் கொள்ளுகிறார் என்பதையும் ஆழ்ந்து சிந்திப்போமாக. உதவிக்கரம் நீட்டும் சிலாக்கியத்தை ஒரு சகோதரன்கூட காணாதிருந்தாலும் பாராமடைந்தவர்கள் மனச்சோர்வடையாதிருப்பார்களாக. தேவையைக் கர்த்தர் அறிவாரென்றும் தேவையான உதவியை அனுப்புவாரென்றும் மனதில் பதித்திருந்தாலும் இயேசுவின் காரியத்தில் உலகத்தாரின் அனுதாபத்தினால் போர்ச் சேவகர்கள் உதவி செய்தது போல உதவி அருளப்படும். மரச்சிலுவை நமது கர்த்தருக்கு மிகவும் பாரமான சுமையாயிருக்கவில்லை. அவரைப் போலவே அவருடைய சீஷர்களுக்கும் சிலுவைகள் உண்டு. அவை உலகத்தாரால் காண முடியாதவை ஆகும். ஆனால் அவைகளைச் சகோதரர்கள் புரிந்து கொள்ள வேண்டும். **"ஒருவர் பாரத்தை ஒருவர் சுமந்து இப்படியே கிறிஸ்துவினுடைய பிரமாணத்தை நிறைவேற்றுங்கள்."** (கலா. 6 : 2).

இரக்கமுள்ள யூத ஸ்திரிகள் அழுது கொண்டு அவரருகில் நடந்து போனார்கள். அநேகமாக அதில் நமது கர்த்தருடைய தாயாராகிய மரியாளும் பெத்தானியா ஊரைச் சேர்ந்த மார்த்தாளும் மரியாளும், மகதலேனா மரியாளும் இருந்திருக்க வேண்டும். அதைக் குறித்த விவரங்கள் நமக்குக் கொடுக்கப்படவில்லை. ஆனாலும் ஸ்திரிகளுடைய இரக்கம் தனிப்பட்ட சாட்சியாக குறிப்பிடப்பட்டுள்ளது. முன்பு வியாதியஸ்தர்களை குணமாக்குவது முதலியவற்றில் அவருடைய ஜீவ சக்தி செலவழிக்கப்பட்டதினாலும், உறக்கமும் உணவுமில்லாது இரவு முழுவதும் மிகவும் கொடூரமான மனப்பாரத்தால் அமுத்தப்பட்டதும்கூடச் சேர்ந்து அவரைப் பலவீனப்படுத்தி மயக்கமடையச் செய்தாலும் நமது கர்த்தர் பூரண மன அமைதி உடையவராகவே காணப்பட்டார். அவர் சிலுவையில் அறையப்பட்ட நாளின் காலை வேளை ஏறத்தாழ 9 மணியாயிருக்கலாம். பெலனற்றவராய் அவருடைய சிலுவையின் பாரத்தின் ஒரு பங்கை பிலாத்துவின் நியாயாசன அரண்மனையிலிருந்து கல்வாரி வரை ஏறத்தாழ $^{3}/_{4}$ (முக்கால்) மைல் தூரம் சுமந்து சென்றார். இந்த இடத்திற்கு கபால ஸ்தலம் என்பதற்கு அடையாளமாக 'கொல்கொதா' என்ற பெயர் வழக்கமாக அதன் சுற்றுப் புறத்திலிருந்த ஜனங்களால் பெயரிடப்பட்டது. ஏனென்றால் இந்தக் குறிப்பிட்ட மலைச்சரிவு மண்டை ஓட்டின் அமைப்பையும், நிறத்தையும் அந்தப் பாறை முகப்பிலுள்ள இருண்ட பிளவுகள் கண் குழிகளைப் போலவும், மூக்குத் துளை ஆகியவைகளையும் ஒத்திருக்கிறது.

கசப்பான வெள்ளைப்போளம் கலந்த திராட்சரசத்தை மற்றபடி காடி என்னப்படுவதை அவருக்குக் குடிக்க கொடுத்தது அவரை அவமானப்படுத்தும் செயல் அல்ல. அது வழக்கமாக ஒரு கனிவான செயலாக எண்ணப்பட்டது. உபத்திரவப் படுகிறவர்களுக்கு நிவாரணமளிப்பதற்காக ஒரு பெண்களின் சங்கம் புளித்த திராட்சரசத்தோடு உணர்வுகளை மரத்துப்போகச் செய்யும் கசப்பான மருந்துகளைக் கலந்து சிலுவையிலறையப் படுகிறவர்களின் வலியுணர்ச்சியை பிரிக்கச் செய்யும் நோக்கத்தில் அவர்களுக்குக் குடிக்கக் கொடுப்பார்கள். அந்தப் பரிதாபத்துக்குரிய எளியவர்களின் கொடூரமான உபத்திரவங் களை மிகவும் குறைப்பதற்காக இந்தக் காடியை ஒருவேளை மருந்தாக எல்லாருக்கும் கொடுப்பது வழக்கமாக இருந்தது. மத்தேயு நமக்கு தெரிவிக்கிறபடி நம்முடைய கர்த்தர் அந்த திராட்சரசத்தை ருசிப்பார்த்தார். அது என்னவென்று தமக்கு உறுதி செய்து கொள்ளவும் அல்லது அதனால் காட்டப்பட்ட இரக்க சிந்தையை பாராட்டுதலின் அடையாளமாகவும் அவர் அப்படிச் செய்திருக்கலாம். ஆனால் அவர் அதைக் குடிக்க மறுத்துவிட்டார் என்று நமக்குச் சொல்லப்பட்டிருக்கிறது. பிதாவின் ஞானமும், அன்பும், நீதியும் அவருக்காக ஆயத்தப்படுத்தி அவருடைய உண்மையையும், கீழ்ப்படிதலையும் பூரணமான அளவில் சோதிப்பதற்கு அவர்மீது வரும்படி அனுமதித்திருந்த வலியையும் உபத்திரவத்தையும் பூரணமான அளவில் அனுபவிக்க விருப்பமுள்ளவராயிருந்தார் என்பதைத் தெளிவாகக் காட்டுகிறது. (எபி. 5 : 7, 8)

சிலுவையில் அறையப்படுவது ஒரு கொடூரமான சோதனை முறையாகும். சிலுவையைத் தரையில் கிடத்தி குற்றவாளியை அதன்மீது படுக்கவைத்து கைகளையும், கால்களையும் இழுத்துப் பிடித்து வைத்து அவைகளை ஊடுறுவும்படி ஆணியடிப்பார்கள். மேலும், கூடுமானால் அதைவிட கொடூரமான வேதனை தரக்கூடிய நேரம் பலமுள்ள மனிதர்களால் சிலுவை தூக்கப்பட்டு, பாறையில் அதற்காகத் தோண்டப்பட்ட குழிக்குள் போடப்படும்போது உண்டாவதாகும். கர்த்தர் அனுபவித்த அந்த தாங்கமுடியாத வேதனையை சுவிசேஷகர் நின்று விவரித்து அல்லது விளக்காமல் விட்டுவிட்டது மிகச் சரியானதாகும். அதைப் போலவே நாமும் மிகச் சரியாக அந்தக் காரியத்தை விட்டுவிடுவோம். இருந்தபோதிலும் தமது விலையேறப்பெற்ற இரத்தத்தினால் நம்மை மீட்டுக் கொண்டவரின் பங்கில் நமது பாவங்களுக்குக் கிரையமாக கொடுக்க வேண்டியதிருந்ததை நினைக்கும்போது நமது இருதயங்கள் இன்னமும் வலிக்கின்றன. இந்த சந்தர்ப்பத்தை தெளிவாகப் புரிந்து கொண்டவன் கர்த்தருக்காகவும், அவருடைய காரியத்திற்காகவும், அவருடைய ஜனங்களுக்காகவும் ஏதாவது உபத்திரவப்பட மேலும் அதிக விருப்பமுள்ளவனாயிருப்பான். இவ்வாறு தேவ குமாரனால் அவனுக்குச் செய்யப்பட்ட பெரிய காரியங்ளைப் போற்றி பிரதிபலனாக தனது அன்பை வெளிப்படுத்துவான்.

கொலை செய்யப்பட்ட மனிதனுடைய சொந்தச் சொத்துக்களை மரணதண்டனையை நிறைவேற்றும் போர்ச் சேவகர்கள் விசேஷித்த இனமாகப் பங்கிட்டுக் கொள்வது வழக்கமாயிருந்தது. இயேசுவினுடைய காரியத்திலும் அவருடைய வஸ்திரங்களைப் பங்கிட்டுக் கொண்டார்கள். அவருடைய வெளி அங்கி, தலையில் அணியும் துண்டு, செருப்புகள், இடைக்கச்சை ஆகியவை ஒவ்வொருவருக்கும் ஒன்று கிடைக்கும்படி போதுமானதாயிருந்தது. அவன வனுக்குக் கிடைக்க வேண்டியதைக் குறித்து சீட்டுப் போட்டு எடுத்துக் கொண்டார்கள் என்று நாம் வாசிக்கிறோம். ஒரு வஸ்திரம் மீதியாயிருந்தது. அதாவது அவருடைய அங்கி அல்லது உள்ளாடை. அந்த அங்கி கழுத்து முதல் கால்வரை தையலில்லாமல் மேலே தொடங்கி முழுவதும் நெய்யப் பட்டதாயிருந்தது இதை அவர்கள் பிரயோஜனமாக பங்கு போட முடியவில்லை. எனவே அவருடைய உடையின்மேல் சீட்டுப் போட்டார்கள். (சங். 22 : 18; யோவா. 19 : 23, 24).

யூதருடைய முறைமையின்படி அவரை மூன்றாம் மணி வேளையில் சிலுவையில் அறைந்தார்கள். அது நமது முறைமையின்படி காலை ஒன்பது மணியாகும். அவருடைய தலைக்குமேல் அவரைப் பற்றிய குற்றச்சாட்டு மூன்று பாஷைகளில் அதாவது, ரோம அரசாங்க அல்லது அலுவலக பாஷையாகிய லத்தினிலும், அந்த காலத்திய இலக்கிய பாஷையாகிய கிரேக்கத்திலும், யூதர்களுடைய பாஷையாகிய எபிரேய பாஷையிலும் எழுதப்பட்டிருந்தது. இயேசுவின்மீது சுமத்திய குற்றச் சாட்டுகளில் பிரதான ஆசாரியர்கள், விசேஷமாக அழுத்திக்கூறியது அவர் தன்னை யூதர்களின் ராஜா என்று உரிமை பாராட்டினார் என்ற குற்றச்சாட்டுதான். யூதர்களுடைய பிரதான ஆசாரி யர்கள் பிலாத்து எழுதியதற்கு மறுப்பு தெரிவித்து அதை மாற்றுவதற்குப் பிரயாசப்பட்டார்கள். ஆனால் பிலாத்து "**நான் எழுதினது எழுதினதே**" என்று கூறி மறுத்துவிட்டான். (யோவா. 19 : 19-22) யூதருடைய ராஜாவாக உரிமை பாராட்டிய வஞ்சகன் என்று அந்த யூதர்கள் எழுதி யிருப்பார்கள். ஆனால் தெய்வீக பராமரிப்பினால் "**நசரேய னாகிய இயேசு யூதருடைய ராஜா**" என்ற உண்மையான பட்டம் அவருடைய தலைக்குமேல் வைக்கப்பட்டிருந்தது. யூத ரல்லாத நாமும் அவர் இதற்கும் அதிகமாக, தேவ கிருபையால் உலகத்திற்கு உரிமைக்காரராயும் நிச்சயமாக பூமியின் ராஜாவாகவும், ஏற்கனவே பரிசுத்தவான்களின் ராஜாவாயிருக்கிறார் என்று காரணத்தினால் மகிழ்ச்சி அடைவோமாக.

அதே வேளையில் இரண்டு திருடர்கள் மரண தண்டனைக்காக காத்திருந்தது எப்படி நிகழ்ந்தது என்பது அறிக்கை விவரத்தில் சொல்லப்படவில்லை. மரண தீர்ப்பின் கீழ் அவர்கள் சிறிது காலம் காவல் பண்ணப்பட்டிருந்தார்கள் என்றும், அந்த வேளையில்தானே அவர்களுடைய மரண தண்டனையும் நிறைவேற்றப்பட வேண்டுமென்று பிரதான ஆசாரியர்களே ஆலோசனை கூறியிருக்கலாம் என்றும் நாம் நிதானிக்கலாம். அவர்களுடைய நடத்தையின் அநீதியிலிருந்து வேறு வழியில் திருப்பி இயேசுவானவர் மீது எடுத்த நடவடிக்கைகள் முழுவதும் நீதியானது என்று காட்டும் எண்ணத்திலும் அல்லது திருடர்களுக்குத் தோழன் என்று இயேசுவானவரைக் கேவலப்படுத்தும் நோக்கத்திலும் செய்திருக்கலாம். ஆனால் எந்தச் சூழ்நிலையாயிருந்தாலும் இந்தக் காரியம் யேகோவாவினால் முன்காணப்பட்டு "**அக்கிரமக்காரரில் ஒருவராக எண்ணப்பட்டார்.**" (ஏசா. 53 : 12) என்று தீர்க்கதரிசியால் முன்னுரைக்கப்பட்டது.

"நாமோ, அவர் தேவனால் அடிபட்டு வாதிக்கப்பட்டவரென்று எண்ணினோம்"

சிலுவையினருகில் அப்போஸ்தலனாகிய யோவா னும், இயேசுவின் தாயாரும் அவரிடத்தில் அன்புவைத் திருந்த மற்றவர்களும் நின்று கொண்டிருந்தார்கள். அவர் அடைந்த நிந்தையையும் உபத்திரவங்களையும் கண்டார் கள். அதன் தேவையைப் பூரணமாக மதிப்பிட முடியாததால் அவர்களுடைய இருதயங்கள் இரக்கத்தினால் நொறுங் கியது. அதை நாம் சீக்கிரத்தில் காண்போம். கொல்கொதா வழக்கமான பாதையில் இருந்ததால் வழிப் போக்கர்கள் போய்வந்து கொண்டிருந்த போதிலும், சில சோம்பேறிகள் ஒரு வேளை அங்கு நின்றிருக்கலாம். இவர்களில் அநேகர் இயேசுவைப் பற்றியும் அவருடைய அற்புதங்களைப் பற்றியும் அதிகமாகக் கேள்விப்பட்டிருந்தார்கள். இப்போதோ அவருடைய அற்புதங்கள் பொய்யானவை என்றும் பரிசேயர்கள் சொன்னபடி ஒரு வேளை பிசாசுகளின் தலைவனாகிய பெயல்செபூலின் வல்லமையினாலே செய்யப்பட்டவை (மத். 2 : 24) என்பதையும் ஒத்துக் கொண்டார்கள் என்பதும் தெளிவாகத் தெரிகிறது. கர்த்தர் தமக்கு ஒப்புவிக்கப்பட்ட கிரியைகளை தேவ பெலத்தால் செய்து முடித்ததாக அவர் உரிமை கொண்டாடியதை ஒத்துப்பார்த்து அவருடைய சத்துருக்களின் தயவில் அவர் இருக்க வேண்டியதில்லை என்று முடிவு செய்தார்கள். ஒருவன் தானாக முன்வந்து தனது சிநேகிதருக்காக ஜீவனைக் கொடுக்கலாம் என்பது அவர்களுக்கு ஒருபோதும் தோன்றவில்லை. கர்த்தருடைய மரணத்தின் நோக்கத்தைப் பற்றி சிறிதளவு எண்ணங்கூட அவர்களிடமில்லை.

கர்த்தரைப் பின்பற்றுகிறவர்களைப் பொறுத்த மட்டிலும் உலகமானது இதைப் போன்ற தவறையே செய்தது. வருத்தங்கள், சோதனைகள், துன்பமடைதல், ஏழ்மை நிலைமையை உடையவர்கள் தெய்வீக தயவற்ற நிலைமை யின் கீழ் இருக்கிறார்கள் என்று எண்ணினார்கள். நம்முடைய கர்த்தரைப் பற்றியும் அவ்வாறே தீர்க்கதரிசனம் உரைக்கப்பட்டது. அவரை உண்மையாய்ப் பின்பற்றுகிறவர் களின் காரியத்திலும் உண்மையாயிருக்கிறது. "**நாமோ அவர் தேவனால் அடிக்கப்பட்டு வாதிக்கப்பட்டு, சிறுமைப்பட்டவரென்று எண்ணினோம், அவரை விட்டு நம்முடைய முகங்களை மறைத்துக்கொண்டோம்**" (ஏசா. 53 : 3, 4). தெரிந்து கொள்ளப்பட்டவர்களை ராஜ்யத்திற்கு ஆயத்தப்படுத்து வதற்கு தேவையான அனுபவங்களை அவர்களுக்குக் கொடுப்பதில் தேவ தயவு வெளிப்படுவதை நாம் பகுத்தறிந்து கொள்வதுபோல உலகத்தால் முடியாது.

பிரதான ஆசாரியர்களும், வேத பாரகரும் அவர்களுடைய குற்றவாளி அவர்களை விட்டு தப்பவிடாமல் உறுதிசெய்துகொள்ளும் ஆவலில் சந்தேகத்திற்கிடமின்றி முக்கியமான காரியங்களைப் புறக்கணித்துவிட்டு சிலுவை வரை அவரைப் பின்தொடர்ந்து சென்றார்கள். அவர்களும், அதைப் போல மற்றவர்களும் அவரைப் பரியாசம் பண்ணி சிலுவையிலிருந்து இறங்கிவரும்படி அவருக்கு சவால்

விட்டார்கள். (மத். 27 : 39-43) '**மற்றவர்களை இரட்சித்தான்**' என்று அவர்கள் மனதார ஒத்துக் கொண்டது ஆச்சரியம் தான். அவர்களுடைய பிடியிலிருந்து அவர் தன்னை இரட்சித்துக் கொள்ளாதது, யேகோவா தேவனுக்கும் அவருக்குமுள்ள உறவைப் பற்றி அவர் உரிமை பாராட்டியதெல்லாம் பொய்யானது என்பதற்கு முடிவான ஆதாரமாக அவர்களுக்குக் காணப்பட்டன. நம்முடைய பாவங்களில் நம்மை விட்டுவிடாமலும் உலகமனைத்தையும் மீட்கும்படியாகவும் இயேசுவானவர் சிலுவையை விட்டு இறங்கி வராமலிருந்ததற்காக நாம் மிகவும் மகிழ்ச்சி யடைவோமாக.

அவருடைய இரத்தம் அவர்கள்மீதும் அவர்க ளுடைய பிள்ளைகள்மீதும் இருப்பதில் அந்த யூதர்கள் திருப்தியடைந்திருந்தார்கள். (மத். 27 : 25) பரிதாபமான மனிதர்கள்! அவர்கள் தங்களை ஞானிகளாக எண்ணி யிருந்தாலும், சில நாட்களுக்குப் பின்பு அப்போஸ்தலனாகிய பேதுரு இந்தக் காரியம் முழுவதும் அறியாமையினால் செய்யப்பட்டது என்று சுட்டிக் காட்டினார். "**சகோதரரே, நீங்களும் உங்கள் அதிகாரிகளும் அறியாமை யினாலே இதைச் செய்தீர்களென்று அறிந்திருக்கிறேன்**" (அப். 3 : 17) என்பதே அவருடைய வார்த்தைகள். அவர் களுக்கும் ஆம் மனுக்குலத்தில் பெரும்பாலோருக்கும் இது அனுகூல மானது. கற்பனையில் உருவாக்கியபடி தேவன் கோபம் கொண்டிருப்பவரல்ல. அதற்கு மாறாக அவர் உருக்கமும், இரக்கமும், நீடிய சாந்தமும், மிகுந்த கிருபையுமுள்ளவர் (சங். 103 : 8) இதற்கு முழுவதும் இசைவாக இந்த மகிமையான தீர்க்கதரிசனம் உள்ளது. முடிவிலே கர்த்தரை சிலுவையில் அறைந்தவர்கள் தாங்கள் குத்தினவரை நோக்கிப் பார்ப்பார்கள். கர்த்தர் அவர்கள் மீது கிருபையின் ஆவியையும் விண்ணப்பத்தின் ஆவியையும் ஊற்றுவார். அவர்கள் அதற்காக மிகவும் மனங்கசந்து துக்கிப்பார்கள். (சகரி. 12 : 10).

"அவர் வையப்படும்போது பதில் வையவில்லை"

வையப்படும்போது (நிந்திக்கப்படும்போது) நமது கர்த்தர் காட்டிய பொறுமை நமக்கு ஒரு முன் மாதிரி யாயிருக்கிறது என்று அப்போஸ்தலர் சுட்டிக் காட்டுகிறார். "**அவர் வையப்படும்போது பதில் வையவில்லை.**" (1 பேது. 2 : 23). அவரை துன்பப் படுத்தியவர்கள்மீது காயப்படுத்தும் எத்தனையோ காரியங்களை உண்மை யாகவே பழி சுமத்தியிருக்கலாம். அவருடைய பொறுமை யின் இரகசியம் பரத்திலிருந்து உமக்குக் கொடுக்கப் படாதிருந்தால் என்மேல் உமக்கு ஒரு அதிகாரமுமிராது (யோவா. 19 : 11) என்று பிலாத்துவிடம் அவர் சொன்ன வார்த்தைகளில் தெளிவாக அறிவிக்கப்பட்டது. இதே கருத்து "**பிதா எனக்குக் கொடுத்த பாத்திரத்தில் நான் பானம் பண்ணாதிருப்பேனோ?**" (யோவா. 18 : 11) என்ற வார்த்தை களில் தெளிவாக அறிவிக்கப்பட்டது. இதைப் போலவே நிந்தை களையும், உபத்திரவங்களையும் பொறுமையோடும் முறுமுறுப் பில்லாமலும் ஏற்றுக் கொள்ளும் வல்லமை கர்த்தருக்கென்று நாம் முழுமையாகவும், பூரணமாகவும் பிரதிஷ்டை செய்திருக்கும் அளவுக்குத்தக்கதாகவும், மேலும் "**நல்ல மனுஷனுடைய** (நீதிமானுடைய) **நடைகள் கர்த்தரால் உறுதிப்படும்** (சங். 37 : 23) என்பதை நாம் உணர்ந்து கொள்ளும் அளவுக்குத்தக்கதாகவும் இருக்கும்.

இயேசுவானவரின் சிலுவை மரண அனுபவத்தின் இறுதியில் ஏறத்தாழ மதியம் மூன்றாம் மணி நேரத்தில் அவர் பலத்த சத்தத்தோடு கூப்பிட்டது இன்னமும் கணிசமாக ஜீவ சக்தி அவரிடமிருந்ததை சுட்டிக் காட்டுகிறது. "**என் தேவனே, என் தேவனே, ஏன் என்னைக் கைவிட்டீர்?**" (மாற். 15 : 34) என்ற மிகுந்த சத்தமிட்டு கூப்பிட்டார். அவர் பிதாவுக்கு பிரியமா யிருக்கிறார் என்று கெத்செமெனே தோட்டத்தில் அவருக்கு உறுதியளிக்கப்பட்டதிலிருந்து இரவிலும், பகலிலும் அவரடைந்த அனுபவங்கள் முழுவதிலும் நம்முடைய கர்த்தர் மிகவும் அடக்கமும், மன அமைதியும் உடையவராயிருந்தார். பின்பு ஏன் அவருடைய அனுபவங் கள் முடிவடையப் போகையில் அவருடைய இருதயத்திற்கும் பிதாவுக்குமிடையில் மிக இருண்ட ஒருமேகம், ஒரு நிழல் இருந்தது? தம்முடைய நேச குமாரனும் மிகவும் பிரியமானவருக்கு அவருடைய ஆறுதலும், பெலனும், ஜீவாதாரமாக அவருடைய அன்பும் தயவும் மற்ற சமயங்களைவிட மிக அதிகமாகத் தேவைப்படும் சமயத்தில் பிதாவானவர் அவர்களுக்கிடையில் மேகம் வர ஏன் அனுமதித்தார்? நம்முடைய கர்த்தர் ஏன் சிலுவையில் அறையப்பட்டார் என்பதை பின்பு நாம் ஆராயும்போது இதற்கும் பதிலளிப்போம்.

அந்த நேரத்தில்தான் நமது கர்த்தர் "**தாகமா யிருக்கிறேன்**" என்று சொன்னார். அவர்கள் கடற்காளானை புளிப்பான காடியிலே நனைத்து ஈசோப்புத் தண்டில் மாட்டி, அவர் வாயினிடத்தில் நீட்டிக் கொடுத்தார்கள். (யோவா. 19 : 29). அவருடைய உதடுகளை அது நனைத்த தால் சிறிது களைப்பு நீங்கிற்று ..... ஏனெனில் அந்த சூழ்நிலைகளின்கீழ் அவருடைய காயங்கள் ஒருவருடைய இரத்தத்தில் கடுமையான காய்ச்சலை நிச்சயமாக ஏற்படுத்தியிருக்கும். "**பிதாவே உம்முடைய கைகளில் என் ஆவியை (என் ஜீவனை) ஒப்புவிக்கிறேன்**" என்று இயேசு மறுபடியம் மகா சத்தமிட்டுக் கூப்பிட்டார். தேவனிடத்தில் அவர் வைத்திருந்த விசுவாசம் பூரணமானது என்றும் அவர் ஜீவனைப் பிரதானமாக எண்ணினார் என்றும் இது காட்டுகிறது. அவர் தம்முடைய ஜீவனை மிகவும் பக்தி விசுவாசத்துடனும், மிகவும் உதாரகுணத்துடனும் பிதாவின் ஏற்பாடுகளுக்கு இசைவாகவும் ஒப்புக்கொடுத்தார். அதற்கு வெகுமதியாக அவரை மரித்தோரிலிருந்து உயிரோடெழுப்பு வதாக பிதா அவருக்கு வாக்குத்தத்தம் செய்திருந்தார். (சங். 16 : 8-11; ஏசா. 53 : 10-12). அவர் இந்த வாக்குத்தத்தத்தை நம்பினார். இப்போது அவர் மரண மூச்சு விடும்போதும் தம்முடைய விசுவாசத்தை வெளிப்படுத்தினார்.

"முடிந்தது"

"முடிந்தது" என்று சொன்னபின்பு இயேசு, "**தலையைச் சாய்த்து ஜீவனை** (கிரேக்கம்-சுவாசத்தை விட்டார்) **விட்டார்.**" அவர் மரித்தார். (மாற். 15 : 37; யோவா. 19 : 30). அப்பொழுது பரிசுத்த ஸ்தலத்தையும் மகா பரிசுத்த ஸ்தலத்தையும் பிரித்த தேவாலயத்திரைச் சீலை கீழிருந்து மேலாக அல்ல (அது கீழிருந்து மேலாக கிழிந்திருந்தால் அது பழசானதால் நொய்ந்து அப்படி

நிகழ்ந்தது என்று எதிர்பார்க்கலாம்), ஆனால் அது மேலிருந்து கீழாக கிழிந்தது. அது தேவ வல்லமையின் வெளிப்பாடென்று காட்டுகிறது. (மாற். 15 : 38). திரை அல்லது திரைச்சீலை 60 அடி நீளமும் 30 அடி அகலமும் 4 அங்குல கனமும் கொண்டதாக விவரிக்கப்பட்டுள்ளது. அது, பாபிலோனிய வேலைப்பாடும், வெள்ளை நூலும் இரத்தாம்பர நூலும், சிவப்பு நூலும் கலந்து ஆச்சரியமாக நெய்யப்பட்டதாயிருந்தது" என்று ஜோசபஸ் விவரிக்கிறார். திரைச்சீலை கிழிந்தது. பரலோக நிலைமையான தெய்வீக சுபாவத்திற்கு வழி திறக்கப்பட்டதை அடையாளமாகக் காட்டிற்று. (2 பேது. 1 : 4; எபி. 6 : 19, 20). கிறிஸ்துவானவர் புதிதும் ஜீவனுமான மார்க்கத்தை (தமது மாம்சமாகிய) திரையின் வழியாக அதாவது தமது மாம்சத்தை பலியிட்டதின் மூலமாக திறந்தார் என்று சொல்லலாம். (எபி. 10 : 19)

பெந்தேகொஸ்தே நாளில் சபை பரிசுத்த ஆவியால் ஜெநிப்பிக்கபட்டு இயேசுவோடுகூட ஆசாரியர்களாகப் பரிசுத்த ஸ்தலத்தில் இருப்பதாகக் காட்டப்பட்டது. இரண்டாந் திரையைக் கடந்து அவர்களுடைய தலையாகிய இயேசு வோடுகூட தெய்வீக சுபாவத்தை அடைவதற்கு எதிர்பார்த் திருக்கும்போது (1 யோவா. 3 : 2) நிறைவேறுதலான பொன் குத்துவிளக்கின் வெளிச்சத்தையும், பொன் மேஜை (சமூகத்தப்பத்து மேஜை) மீதுள்ள அப்பத்தை அனுபவிப் பதற்கும், பொன் தூப பீடத்தில் தூபவர்க்கத்தை செலுத்தவும் அவர்களுக்கு சிலாக்கியம் அளிக்கப்படுகிறது.

இயேசுவானவர் ஏன் சிலுவையிலறையப்பட்டார்?

கர்த்தருடைய பாடுகளும் மரணமும் ஏன் கட்டாயமாகத் தேவைப்பட்டது என்பது, கர்த்தரைப் பின்பற்றுகிறோம் என்று அறிக்கையிடுகிறவர்களில் ஆராய்ச்சி செய்பவர்களுக்கும் மற்றும் அநேகருடைய மனதுக்கும் கிறிஸ்தவ சமயத்தோடு தொடர்புள்ளவர் களுக்கும் மிகவும் குழப்பமான காரியங்களில் ஒன்றாயிருக்கிறது. அவை கட்டாயமாகத் தேவைப்பட்டது. ஏனெனில் தேவன் அதைக் கட்டாயத் தேவையாக ஏற்படுத்தினார் என்றும், அவைகள் இல்லாமல் முடியாதபடி அவருடைய திட்டத்தை அம்முறையில் அவர் ஒழுங்கு செய்தார் என்றும் நாங்கள் பதிலளிக்கிறோம். வேறு ஒரு இரட்சிப்பின் திட்டத்தை அவர் ஏற்படுத்தியிருக்கலாம் என்பது கேள்விக்கு அப்பாற்பட்டது. ஏனெனில் அந்தக் காரியம் முழுவதுமே அவருடைய கரத்தில்தான் இருந்தது. அதைப் போல அவர் மிகச் சிறந்த திட்டத்தையே தெரிந்தெடுத்தார் என்பதும் மறுக்கமுடியாததாகும். தன்னுடைய சுயபுத்தியி னாலும் அல்லது சுபாவ அறிவாலான மனுஷீகத் தத்துவங்களைக் கொண்டு இதற்கு விடைகாண முயற்சிக் கிறவன் எவனும் நிச்சயமாக தவறு செய்வான். பத்திர மானதும் சரியானதுமான ஒரே போக்கு இக்காரியத்தைக் குறித்து பரத்திலிருந்துவரும் ஞானத்திற்கு செவிகொடுப் பதுதான்.

தேவனுடைய சத்தத்துக்கு செவி கொடுத்து ஆரம்பமுதல் முடிவுவரை அவருக்குத் தெரியும் (அப். 15 : 18) அவருடைய ஏற்பாடு (திட்டம்) அவருடைய குணவிசேடங் களாகிய நீதி, ஞானம், அன்பு, வல்லமை ஆகியவை சம்பந்தமாக மனிதருக்கு மட்டுமல்லாது தேவதூதர் களுக்கும் பரிசுத்தமுள்ளவர்களுக்கு மட்டுமல்லாது பரிசுத்தமில்லாதவர்களுக்கும் ஒரு பாடமாக இருக்கும் படியாகத் திட்டமிடப்பட்டுள்ளது என்பதை நாங்கள் அறிந்துகொள்கிறோம். தேவ எற்பாடு முழுவதுமாக நிறைவேற்றப்படும்போது தெய்வீக ஏற்பாட்டில் விளங்கிய ஞானம், நீதி, அன்பு, வல்லமை ஆகியவைகளின் நீளம், அகலம், உயரம், ஆழம் ஆகியவற்றை எல்லாரும் காண்பார்கள். இருந்தாலும் தற்காலத்தில் ஒருசிலர் மட்டுமே பார்க்கலாம். கர்த்தருடைய இரகசியமான திட்டம் அவருக்குப் பயந்தவர்களுக்காக உள்ளது. அவர்களுடைய இரகசிய மான திட்டம் அவருக்குப் பயந்தவர்களுக்காக உள்ளது. அவர்களுக்குத் தம்முடைய உடன்படிக்கையைத் தெரியப்படுத்துவார். (சங். 25 : 14) (லீசர் மொழிபெயர்ப்பு).

தாம் விதித்த தீர்ப்பைத் தம்மால் தள்ளுபடி செய்ய முடியாது என்ற பூரண அறிவுடன் தேவன் பாவத்திற்கு தண்டனையாக மரணத்தை தீர்ப்பு செய்தார். அந்நேரத்தில் ஆதாம் பாவம் செய்வான் என்றும் அவனும் அவனுடைய சந்ததி முழுவதும் மரண ஆக்கினையின்கீழ் வரும் என்றும் அவருக்குத் தெரியும். ஆதாமுக்கும், அவர் மரண ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்பட்டார் என்பதைப் புரிந்துகொண்ட யாவருக்கும் இந்த சங்கதி நம்பிக்கை யற்றதாகக் காணப்பட்டது. ஏனெனில் முதலாவதாக தேவன் தம்முடைய தீர்ப்பை ரத்து செய்ய முடியாது, இரண்டாவதாக அந்த வார்த்தை மனிதனிடமிருந்து அவனுடைய ஜீவனைப் பறித்துக்கொள்வதற்கு ஒவ்வொன்றையும் அவனிடமிருந்து பறித்துக் கொண்டது. தேவன் தம்முடைய நோக்கத்தில் ஒரு பதிலாள் வைத்திருக்க வேண்டும் என்பது மனிதனுடைய மனதில் தோன்றவில்லை. அப்படியே அவனுடைய மனதில் தோன்றியிருந்தாலும் ஆதாமுக்குப் பதிலாளாகும் தகுதி யுடைய ஒருவரையும் அவனுடைய சக மனிதர்கள் மத்தியில் கண்டிருக்க முடியாது. ஏனென்றால் விழுதலின் பலனாக அவர்களுடைய மரபுரிமைப் பங்கின் மூலமாக எல்லாரும் பாவிகளாயிருக்கிறார்கள். தேவன் விழுந்துபோன ஆதாமின் சந்ததியை கண்ணோக்கிப் பார்த்து நியாயப்பிர மாணத்தை மீறுகிறவர்களுக்கு தண்டனையிலிருந்து தப்பும் வழியை ஏற்படுத்துவதற்காக தவிர்க்க முடியாத அவ்வளவு கிரயத்தையும் செலுத்தி அவ்வளவு இரக்கமுள்ளவ ராயிருந்தார் என்பது ஒருக்காலமும் மனிதனுடைய மனதில் தோன்றவில்லை என்பது நிச்சயம்.

ஆதாமுக்காக அப்படிப்பட்ட ஒரு பதிலாளை தேவன் ஏற்படுத்துவதின் அர்த்தம், ஒவ்வொரு விவரத்திலும் ஆதாமுக்குச் சமமான மற்றொரு மனிதனை சிருஷ்டிப்பது அல்லது விழுவதற்கு முன் ஆதாம் இருந்ததுபோன்ற பூரண மனுஷீக சுபாவத்துக்கு ஏதாவது பரிசுத்த ஜீவியை மாற்றுவதாகும். சர்வ வல்லமையுள்ள தேவன் தம்முடைய மானிட சிருஷ்டிகளின் நலன்களில் இவ்வளவாய் அன்பாதர வாயிருப்பார் என்று மனிதன் எண்ணிப் பார்த்திருக்கவும் முடியாது. மேலும் ஆதாமைப் போல ஒரு மனிதனை தேவன் சிருஷ்டிப்பது மீறுதலை இரட்டிப்பாக்கியதுபோலிருக்கும் என்று அவர்கள் நியாயப்படுத்தியிருக்கலாம். அதே வேளையில் மகிமையுள்ள ஒரு ஆவி ஜீவியை மானிட நிலைமைகளுக்கு மாற்றுவது நீதியை மீறுவதாக

அவருக்குக் காணப்பட்டிருக்கும். பரிசுத்தமற்ற பாவமானவர்களின் நலன்களுக்காக பரிசுத்தமான கீழ்ப்படிதலுள்ள சிருஷ்டியை தண்டிப்பதாகும்.

ஆனால் ஏற்படுத்தப்பட்ட ஒழுங்கில் வெளிப்பட்ட தேவனுடைய ஞானத்தையும் அதனோடு கூட அவருடைய அன்பையும், நீதியையும் பாருங்கள். ஆதாமுக்காகவும் இவ்வாறு அவனுடைய சந்ததிக்காகவும் ஒரு மீட்கும் பொருளை சமமான அல்லது ஈடான கிரயத்தை (1தீமோ. 2 : 6) தேவன் ஏற்படுத்தினார். விழுந்துபோனவனுக்காகவும், அவனுக்குள் ஜீவனை இழந்தவர்களுக்காகவும் அவர் ஒரு பூரண மனிதனை மீட்பராக ஏற்படுத்தினார். இருந்தாலும் அவர் யாருக்கும் அநீதி செய்யவில்லை. இன்னுஞ் சரியாகச் சொன்னால் மனிதனுடைய மீட்பராக வருகிறவர்தாமே அந்த வேலையோடு இணைந்துள்ள பாடுகளாலும் இழப்புகளாலும் மாபெரும் ஆதாயமடைய அவர் ஒழுங்கு செய்திருந்தார். பரம சேனைத்திரள் அனைவருக்கும் பொதுவான வழியில் தேவன் இந்தத் திட்டத்தைக் கொடுத்திருந்தால் பிதாவானவர் மிகச் சிறந்ததென்று அவர்களுக்குக் கொடுக்கும் ஆசீர்வாதத்தையும் எந்த வெகுமதியையும் நம்பியிருக்கவும், மனப்பூர்வமாக சந்தோஷமான கீழ்ப்படிதலைக் காட்ட அநேகர் தயாராயிருந்திருப்பார்கள் என்பதில் சந்தேகமேயில்லை. ஆனால் அவர் இந்தக் காரியத்தை பொதுவாகக் கொடுக்காமல், ஒருவருக்கு மட்டுமே கொடுத்தார்.

“என் தேவனே உமக்குப் பிரியமானதைச் செய்ய விரும்புகிறேன்”

பரம சேனைத்திரளின் மத்தியில் பிதாவானவரால் ஜெநிப்பிக்கப்பட்ட ஒரே பேறான குமாரனும் இருந்தார். அவர் ஆதியிலே வார்த்தை என்று அழைக்கப்பட்டார். அவர் ஒரு தேவனாக அல்லது வல்லமையுள்ள ஒருவராக இருந்தார். அவர் சகல தேவ தூதர்களையும் மானிட ஜீவனையும் சிருஷ்டிப்பதற்கு பிதாவானவருடைய கருவியாக அவரால் உபயோகிக்கப்பட்டார். (யோவா. 1 : 1-3). எல்லாரிலும் உயர்ந்த இவர் ஒருவருக்கே, பிதாவானவர் மாபெரும் பலியின் தீர்மானத்தை அறிவித்தார். பிதாவானவரின் அன்பிலும் வல்லமையிலுமுள்ள விசுவாசத்தின் மாபெரும் பரீட்சை, அதாவது அந்த வேலை முடிந்தபின் அவரைத் திரும்பவும் மகிமையோடுகூட கொண்டு வருவார் என்ற தம்முடைய திட்டத்தை அறிவித்தார். ஒரே பேறானவர் அதை ஏற்க மறுத்திருந்தால் (நாம் அறிந்திருக்கிறபடி அவருடைய நிலைமைக்கு ஆபத்து வராமல்) அச்சமயத்தில் அந்த வாய்ப்பு அல்லது சிலாக்கியம் தேவ தூதர்களில் ஒருவருக்கு, அவருக்கு அடுத்ததாக கனத்திலும், மகிமையிலும், வல்லமையிலும் உள்ள ஒருவருக்கு ஒரு வேளை கொடுக்கப்பட்டிருக்கும் என்பது உண்மை. ஆனால் ஒரே பேறானவர் அதை மறுக்கவில்லை. சந்தேகத்துக்கிடமின்றி மனுக்குலத்துக்காக பிதாவானவரோடு உடன் வேலையாளாயிருக்கும் வாய்ப்பை மகிழ்ச்சியுடன் ஏற்றுக் கொண்டார். அவர் அந்த திட்டப்படி முன்னோக்கிச் சென்றார். பரம வாசஸ்தலத்தை விட்டுவிட்டு பரலோக நிலைமைகள் ஆவிக்குரிய சரீரம் போன்றவைகளையும் ஒதுக்கிவிட்டு குறித்த காலத்தில் மனிதனாக “மனிதனாகிய கிறிஸ்து இயேசுவாக மனிதர்கள் மத்தியில் பிறப்பதற்கு மரியாளின் கர்ப்பத்திற்கு மாற்றப்பட்டார்.

முப்பதாவது வயதில், நியாயப்பிரமாணத்தின்படி சரியான வயதில், மரணபரியந்தம் பூரண பிரதிஷ்டை செய்து அதை ஞானஸ்நானத்தில் அடையாளப்படுத்தினார். 3 $\frac{1}{2}$ வருட காலமாக கல்வாரியில் ‘முடிந்தது’ என்று பலத்த சத்தத்தோடு அவர் கூப்பிட்டது வரையில் அந்த மரணமானது நிறைவேற்றப்பட்டது. இவ்வாறு மனிதனாவதற்கு அவர் தம்மைத்தாமே மிகவும் தாழ்த்தியது ஆயத்த படியாகும். அதே சமயம் ஆதாமுக்காகவும் அவன் பாவஞ்செய்யும் போது அவனுடைய அரையிலிருந்த மனுக்குலத்துக்காகவும் பதிலாளாக அவர் தம்மைக் கொடுத்தது 3 $\frac{1}{2}$ வருட காலமாக நிறைவேற்றப்பட்டு அவருடைய கல்வாரி மரணத்தில் முடிந்தது. உலகத்தை மீட்பது சம்பந்தமாக பிதாவானவர் அவருக்குக் கொடுத்த வேலையை அவர் அங்கே முடித்தார். அவருடைய ஜீவன் ஆதாமிற்குரியதை மீட்கும் பொருளாக இருந்தது. ஏனெனில் உலகம் ஆதாம் மூலமாக அவனுடைய பலவீனங்களையும் அபூரணங்களையும் பரம்பரையாகப் பெற்றதால் ஜீவனை இழந்தது. ஆகவே நீதியாக, சட்டப்பூர்வமாக, உண்மையாக கிறிஸ்துவின் மரணம் ஆதாமை மட்டுமல்லாது உலக மனுக்குலமனைத்தையும் மீட்டுக் கொண்டது.

பாவியான ஆதாம் தேவனுடைய ஐக்கியத்திலிருந்து அறுப்புண்டுப் போனது போல நம்முடைய அன்பான மீட்பரும் அவனுக்கு பதிலாளாக அதைப் போன்ற அனுபவத்தை அவர் மரணமடைவதற்குமுன்பாக கொஞ்சகாலம் அடைய வேண்டியது கடமையாயிருந்தது. அது மிகவும் கஷ்டமான வேளையாயிருந்ததால் அவர் உரத்த சத்தத்துடன் “**என் தேவனே, என் தேவனே ஏன் என்னைக் கைவிட்டீர்?**” என்று கூப்பிட்டார்.

“இயேசு மரித்தோரிலிருந்து எழுப்பப்பட்டார்”

மரித்தோரிலிருந்து அவர் ஆவி ஜீவியாக உயிரோடெழுப்பப்படுவார் என்று பிதாவானவர் அவருக்கருளிய வாக்குத்தத்தம் குறித்த காலத்தில் நிறைவேற்றப்பட்டது. சபைக்காக தேவனுடைய சமூகத்தில் பிரசன்னமாயிருக்கும்படி குறித்த காலத்தில் அவர் உன்னதத்திற்கு ஏறினார். அதனால் தம்முடைய பலியின் புண்ணியத்தை அவர்கள் ஒவ்வொருவருக்கும் சாட்டுதல் செய்ய முடிந்தது. இந்த சாட்டுதல் செய்யும் வேலை சுவிசேஷ யுகம் முழுவதும் தொடர்ந்து நடைபெற்றது. பரம அழைப்பின் கீழ் (பிலி. 3 : 14) பிரதிஷ்டை செய்த ஒவ்வொரு விசுவாசியும் கிறஸ்துவுக்குள் ஏற்றுக் கொள்ளப்பட்டனர். அவருடைய சரீர அங்கங்களாக அவருக்குள்ளாக ஏற்றுக் கொள்ளப்பட்டவர்களாயிருக்கும், இந்த விசுவாசிகள் கிறிஸ்துவின் பாடுகளில் குறைவானதை நிறைவாக்கும்படிக்கு தங்களுடைய சரீரங்களை ஜீவ பலியாக ஒப்புக் கொடுக்கும் சிலாக்கியம் பெற்றிருக்கிறார்கள். விரைவில் பாவ நிவாரண நாளின் பாடுகள் முழுவதும் முடிந்துவிடும். பின்பு விரிவான நோக்கத்தில் மீட்பின் வேலை மேற்கொள்ளப்படும். அப்பொழுது மனுக்குலத்தில் தெரிந்தெடுக்கப்படாத மீதியானவர்களுக்காக கிறிஸ்து தம்முடைய மீட்கும் பொருள் புண்ணியத்தை நீதிக்கு பயன்படுத்துவார்.

இவ்வாறு உலகத்துக்கு எதிரான ஆக்கினையும், சாபமும் நீக்கப்படும். அவர்கள் பங்கில் விசுவாசிப்பதின் மூலம் அல்ல. ஆனால் அவர்களுக்காக தேவனுடைய முன்னேற்பாட்டின்படி கிறிஸ்வின் மூலம் நீக்கப்படும். (1 தீமோ. 2 : 14; 4 : 10; எபி. 2 : 9; 1 யோவா. 2 : 2).

பலன்கள் கிருபையுள்ள விளைவுகள்

உலகத்தில் தெரிந்தெடுக்கப்படாத, "மனிதரில் மீதியானவர்களை" ஆசீர்வதித்து உயர்த்தும் வேலை அப்போது ஆரம்பிக்கும். (ஆதி. 22 : 16-18; கலா. 3 : 8. 16, 29; அப். 15 : 15-17) அதில் இன்னமும் கல்லறைக்குள் போகாமலிருக்கிறவர்களும் (மரிக்காமலிருக்கிறவர்களும்) இறுதியில் மரணமாகிய சிறைச்சாலைக்குள் ஏற்கனவே சென்றவர்களும்கூட சேர்த்துக் கொள்ளப்படுவார்கள். சிறைச்சாலையின் கதவுகள் திறக்கப்பட்டு சிறைப்பட்டவர்கள் அனைவரும் தங்களைக் காட்டுவார்கள். தீர்க்கதரிசி அறிவிக்கிறபடி (ஏசா. 42 : 7; 49 : 9; 61 : 1; 26 : 19). அவர்கள் நியாயத்தீர்ப்புக்கென்று உயிர்த்தெழுவார்கள். (யோவா. 5 : 28, 29 A.R.V) அதில் பரீட்சித்தல் அடங்கி யிருக்கிறது. முதலாவது குற்றத்திற்கான புதிய பரீட்சித்தல் அல்ல. ஆதாமின் மீது விதிக்கப்பட்ட மரணத்தீர்ப்பினால், கொஞ்சங்குறைய பாதிக்கப்பட்டதினால், செய்யப்பட்ட காரியங்களுக்கான பரீட்சித்தல் அல்ல. அவர்களுடைய சொந்தப் பொறுப்பில் ஜீவனுக்கான பரீட்சித்தல் ஆகும். (எரே. 31 : 29, 30; எசே. 18 : 2-4) ஒவ்வொருவருக்கு முள்ள பொறுப்பு அவர்கள் பெற்றிருக்கும் அறிவுக்கும், வளர்ச்சிக்கும் தக்க அளவில் இருக்கும். பரம்பரையாய்ப் பெற்ற ஒவ்வொரு அபூரணத்திற்கும், பலவீனத்திற்கும் பூரண சலுகையளிக்கும் ஒரு நீதியான நியாயத்தீர்ப்பு. மனுக்குலம் கொடுப்பதற்கு பெற்றுள்ள ஆற்றலுக்குத்தக்கதாக மட்டுமே உலகத்திடமிருந்து எதிர்பார்க்கும், பிதாவாகிய ஆதாமின் கீழ்ப்படியாமையால் பரதீசையும் ஏதேன் தோட்டத்தில் இழந்த எல்லாவற்றையும் படிப்படியாகத் திரும்பப் பெற்றுக் கொள்ளும்படி ஒவ்வொருவருக்கும் ஒரு பூரண அவகாசம் அளிக்கப்படுவதன் பலனாக உலக மனுக்குலம் உயர்த்தப்படும். (மத். 18 : 11). மனப்பூர்வமாகக் கீழ்ப்படி கிறவர்கள், இழந்து போனதைத் திரும்பக் கொடுக்கும் காலத்தின் முடிவிலுள்ள பரீட்சித்தலில் வெற்றிகரமாக தேர்ச்சியடைந்து (அப். 3 : 19-23; வெளி. 20 : 7-9) கர்த்தருடைய ஆசீர்வாதமான பூமியில் பூரண ஜீவனைப் பெற்றுக்கொள்ளத் தகுதியானவர்கள் என்று எண்ணப்பட்டு நித்தியமாக அதைத் தொடர்ந்தேர்ச்சியாய் அனுபவிப் பார்கள். அதற்கு விரோதமான சிந்தை உள்ளவர்க ளெல்லாம் இரண்டாம் மரணத்தில் அறுப்புண்டு போவார்கள். (மத். 25 : 34, 41, 46; வெளி. 20 14, 15).

இப்படியாக மரணத் தீர்ப்பிலிருந்து மனிதனை விடுவிப்பதற்காக கர்த்தராகிய இயேசுவின் மரணம் தேவை என்று அறிந்து கொள்கிறோம். நம்முடைய தலைப்பு, வசனம் விவரிக்கிறபடி கிறிஸ்து நம்முடைய பாவங்களுக்காக மரித்தார். தேவன் நீதியுள்ளவரும் இயேசுவினிடத்தில் விசுவாசமாயிருக்கிறவனை நீதிமானாக்குகிறவரும், அவனை மரணத் தீர்ப்பிலிருந்து விடுவிக்கிறவராகவும் விளங்கும்படிக்கும் அவர் மரித்தார். அப்போஸ்தலர் விவரிக்கிறபடி மற்றொரு காரணத்திற்காகவும் நம்முடைய கர்த்தரின் மரணம் அவசியமாயிருந்தது. ஆயிர வருட யுகத்தில் உலகத்தை நியாயந்தீர்க்கத் தகுதியுள்ளவர், அப்போது பரீட்சிக்கப்படும் மனுக்குலத்தின்மீது பூரண இரக்கம் காட்ட வேண்டும், பாவத்திலும் பலவீனத்திலும் சிக்குண்டிருக்கிறவர்களுக்கு உதவி செய்ய விருப்பமும், தகுதியுமுள்ளவராக, அவர்கள் மீது மனதுருகுகிறவராக எல்லாவிதத்திலும் நம்மைப்போல சோதிக்கப்பட்டும் பாவமில்லாதிருக்கிறவராக அவர் இருக்க வேண்டும். (எபி. 2 : 17, 18; 4 : 15) அந்த வேளையில் மகா ராஜா வாகவும், நியாயாதிபதியாகவும் இருக்கிற நம்முடைய கர்த்தராகிய இயேசு மட்டுமல்லாது, நியாயத்தீர்ப்பிலும் ராஜரீக ஆசாரியத்துவத்திலும் அவருடன் உடன் சுதந்தரராயிருக்கும் சபையும் (1 கொரி. 6 : 2; வெளி. 5 : 9, 10; 20 : 4-6). அவர்கள் நியாயத்தீர்த்து, ஆதரித்து, உதவி செய்து உயர்த்துகிறவர்களிடத்தில் இரங்கத் தக்கவர் களாயிருப்பது அவசியமாகும்.

தேவன் தேர்ந்தெடுத்த திட்டம், வார்த்தையின் விரிவான கருத்தில், சிறந்த ஞானமும், மிகச் சிறப்பாக சிந்தித்து உருவாக்கியதாகும். இந்தத் திட்டத்தின்கீழ் மரணத்தீர்ப்பிலிருந்து மனிதனை மீட்க, தேவ நீதியின் முன் பூரண மனிதனின் (இயேசுவின்) மரணத்துக்கு குறை வானதொன்றும் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது என்றும், பிதாவானவர் கிறிஸ்துவுக்குப் பகிர்ந்தளித்ததைப் போன்ற மிக உயர்வான பதவி, கனம், பொறுப்பு ஆகியவைகளை ஒப்படைக்கப் போகிற ஒருவருக்குக் கொடூரமான பரீட்சை களுக்குக் குறைவானதொன்றும் தகுதியாயிராது என்றும் நாம் அறிந்து கொள்கிறோம்.

சபையை மகிமைக்குக் கொண்டு வந்தபின் அதைத் தொடர்ந்து உலகத்தைப் பரீட்சிக்கத் திட்டமிட்ட பிதாவானவருக்கு அவர்களுடைய இரட்சிப்பின் அதிபதியை உபத்திரவங்களால் பூரணப்படுத்தி நிச்சயப்படுத்துவது அவசியமாயிருந்தது. (எபி. 2 : 10). சர்வ லோகத்திலும் பிதாவானவருக்கு அடுத்த ஸ்தானத்தில் உயர்ந்த வராயிருந்தவரை இன்னமும் அதிகமாக உயர்த்துவதற் காக, அவருக்கு தெய்வீக சுபாவத்திலும், மகிமையிலும், கனத்திலும் பங்களிக்க பிதாவானவர் சித்தங்கொண்டார். ஆதலின் தேவ தூதர்களுக்கும், மனிதர்களுக்கும் முன்பாக பிதாவானவருக்கு அவர் முற்றிலும் விசுவாசமுள்ள வராயிருக்கிறார் என்பதை நிரூபித்துக் காட்ட ஒரு வாய்ப்பு கொடுக்கப்பட்டது. நம்மைத் தேவனிடத்தில் சேர்க்கும்படிக்கு, அவர் மாம்சத்திலிருந்த நாட்களில், அநீதியுள்ளவர் களுக்காக நீதியுள்ளவராக பாடுபட்டபோது இதைச் செய்தார். அதன் பலனாக தேவன் "**எல்லாவற்றிற்கும் மேலாக அவரை உயர்த்தி, இயேசுவின் நாமத்தில் வானோர் பூதலத்தோர் பூமியின் கீழானோருடைய முழங்கால் யாவும் முடங்கும்படிக்கும், பிதாவாகிய தேவனுக்கு மகிமையாக இயேசு கிறிஸ்து கர்த்தரென்று நாவுகள் யாவும் அறிக்கை பண்ணும்படிக்கும் எல்லா நாமத்திற்கும் மேலான நாமத்தை அவருக்கு தந்தருளினார்.**" (பிலி. 2 : 8-11).

***

நமது வருடாந்திர பஸ்கா

யாத். 12 : 1–17

Our Annual Passover

நம்முடைய வருடாந்திர பஸ்காவிற்கும் இஸ்ரவேலரின் வருடாந்திர பஸ்காவிற்கும் உள்ள நிறைவேறுதலான சம்பந்தமானது அதனை குறித்து தெளிவாக புரிந்து கொள்ளுவதற்காக எகிப்தில் இஸ்ரவேலர் ஆசரித்த முதல் பஸ்காவை படிக்கும்படியாக நம்மை அறிவுறுத்துகிறது. அதாவது இஸ்ரவேலருடைய வருடாந்திர பஸ்காவானது நம்முடைய வருடாந்திர பஸ்காவிற்கு அடையாளமானதாகும். ஆகையால் இஸ்ரவேலர் எகிப்தில் ஆசரித்த முதல் பஸ்கா, நம்முடைய இரட்சகர் ஏற்படுத்தி வைத்த முதல் பஸ்காவிற்கு அடையாளமாகும். இதற்கிணங்க, இந்த வருடத்தின் வருஷாந்திர பஸ்கா கட்டுரையில் நாம் இந்த இரண்டு பஸ்காக்களைப் பற்றியும் அதாவது எகிப்தில் இஸ்ரவேலர் ஆசரித்த முதல் பஸ்கா மற்றும் நமது இரட்சகர் நமக்கு ஏற்படுத்தித்தந்த முதல் ஞாபகார்த்த பஸ்காவைப் பற்றியும் நாம் சுருக்கமாக படிப்போம். இவ்வாறாக எகிப்தில் கடைசி வாதையின் பல்வேறு முக்கிய பகுதிகளைப் பற்றிய பாடத்தோடு நாம் தொடங்குவோம்.

பார்வோனின் இருதயமானது தெய்வீக இரக்கங்களின் கீழ் அதிகமதிகமாக கடினப்பட்டது. ஒன்றன்பின் ஒன்றாக வந்த ஒவ்வொரு வாதையும் அவன் மோசேயின் மூலம் வேண்டிக்கேட்டதினிமித்தம் நிறுத்தப்பட்டது. தேவனுடைய நற்குணம் அவனை மனந்திரும்புவதற்கு வழிநடத்துவதற்கு பதிலாக மேலும் மேலும் பிடிவாதத்தில் உறுதியானவனாக ஆக்கிற்று. இதனைக் குறித்து தேவன் முன்னதாகவே கண்டு முன்னறிவித்தது போலவே ஆயிற்று.

இருந்தபோதிலும், இந்த பத்தாவதும், கடைசியானதுமான வாதை அந்த கடினமான மனிதனுடைய எதிர்ப்பை நொறுக்கிப் போடத்தக்க போதுமானதாய் இருக்கும் என்றும், அந்த வாதையானது அவனை வற்புறுத்தி இஸ்ரவேலர் விடுதலை பெற சம்மதிக்க வைக்கும் என தேவன் மோசேயிடம் அறிவித்தார். அந்த வாதை ஏற்படுவதற்கு முன்னதாக மோசே பார்வோனிடம் இஸ்ரவேலரை அனுப்பிவிட விருப்பம் இருக்கிறதா இல்லையா? என்று கேட்டான். “இல்லை” என்ற எதிர்மறையான பதிலையே மோசே பெற்றான். ஆகையால் இதைத் தொடர்ந்து ஓர் மாபெரும் வாதை எகிப்தியர் மீது ஏற்படும் என மோசே பார்வோனிடம் எச்சரித்தான்.

அவன் ஜனங்களை யாத்திரைக்கு ஆயத்தப்படுத்துவதற்காக உடனடியாக அங்கிருந்து புறப்பட்டு கோசேன் தேசத்திற்கு போனான். எகிப்தியர் தங்களுடைய பொன் வெள்ளி ஆபரணங்களையும் மேலும் பல்வேறு விலையுயர்ந்த பொருட்களையும் உதாரத்துவமாய்க் கொடுத்தார்கள். இஸ்ரவேலர், வெளியேற வேண்டும் என்பதில் எகிப்தியர்கள் வெளிப்படையாகவே விருப்பமுள்ளவர்களாக இருந்தார்கள். அதுமட்டுமல்லாமல் தங்கள் அதிபதி கடினப்பட்டு பிடிவாதமாக இருப்பதைக் குறித்தும் வருந்தினார்கள். தேவன் இஸ்ரவேலரோடு கூட இருக்கிறார் என்றும் தங்களுக்கு எதிராக இருக்கிறார் என்றும் எகிப்தியர் குறிப்பிட்ட கருத்தில் சந்தேகமில்லாமல் உணர்ந்தார்கள். இந்த விஷயத்தை சீர்தூக்கிப் பார்ப்பதற்கு பார்வோனுக்கோ கடினமாக இருந்தது.

இஸ்ரவேலர் தங்கள் பிரயாணத்துக்கு வேண்டிய ஆயத்தங்களைச் செய்ய எவ்வளவு காலம் எடுத்துக் கொண்டார்கள் என்பது நமக்குத் தெரியாது. ஆனால் அது பார்வோனுக்கும், இந்த பயங்கர கடைசி வாதையை பற்றி மோசேயும் ஆரோனும் பார்வோனுக்கு அறிவித்ததை அறிந்த யாவருக்கும் அந்த காலமானது திகிலுடனும் ஆவலுடனும் எதிர்பார்க்க வைத்த காலம் என்று நாம் நிச்சயமாக நம்பலாம். அந்த ஆயத்தங்களை இஸ்ரவேலர் செய்வதற்கு சில நாட்கள் தேவைப்பட்டிருக்கலாம். ஏனென்றால் கொடுக்கப்பட்ட மற்ற குறிப்புகளோடு கூட பஸ்கா என்றழைக்கப்பட்ட மத ஆராதனையின் அடிப்படையான எந்த குறையுமில்லாத மாசற்ற ஒரு வயது நிரம்பிய ஓர் ஆண் ஆட்டுக்குட்டியை தங்கள் சார்பாக ஒவ்வொரு குடும்பமும் தேர்ந்தெடுக்க வேண்டியிருந்தது. அன்று அது அந்த ஜாதியாரால் ஆசரிக்கப்பட்டதிலிருந்து அது பஸ்கா என்றழைக்கப்பட்டது.

ஆபிப் மாதம் 10–ஆம் நாளிலிருந்து அந்த ஆட்டுக்குட்டியானது தெரிந்தெடுக்கப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டு மற்றவைகளிலிருந்து பிரித்தெடுக்கப்பட்டு விசேஷமாக பராமரிக்கப்பட வேண்டும். ஆபிப் மாதம் பின்னர் நிசான் மாதம் என்று அழைக்கப்பட்டது. அந்த மாதத்தின் 14–ஆம் நாள், இரண்டு சாயங்காலங்களுக்கு இடையில் அது கொல்லப்பட வேண்டும். (அதாவது சாயங்காலம் 6 pm மணிக்கு. இதுவே இஸ்ரவேலரின் சாயங்காலத்தின் மத்தி பகுதியாகும். இஸ்ரவேலரின் முதலாவது சாயங்காலம் 3 pm மணிக்குத் தொடங்கி இரண்டாவது சாயங்காலத்தின் 9 pm மணிக்கு முடிகிறது.) அந்த சாயங்காலத்தில் புசிப்பதற்காக அதின் மாம்சத்தைத் தீயினால் சுட வேண்டும். அதின் இரத்தம் வாசற்கதவின் இரு பக்கங்களிலுள்ள இரண்டு நிலைக்கால்களிலும் மேற்சட்டத்திலும் தெளிப்பதற்காக சேகரிக்கப்பட வேண்டும். 14–ஆம் நாளின் தொடக்கத்திலுள்ள அந்த இரவில் ஆட்டுக் குட்டியின் மாம்சம் கசப்பான கீரையோடு புசிக்கப்பட வேண்டும். புசிப்பவர்கள் குடும்பம் குடும்பமாக கூடி இருந்தது, பிரயாணத்திற்கு எல்லாவித எதிர்பார்ப்போடும் தங்கள் பாதங்களில் பாதரட்சைகளை அணிந்து கையில் தடி பிடித்துக் கொண்டு அதிகாலையில் எகிப்தைவிட்டு வெளியேறுவதற்கு ஆயத்தமாக இருக்க வேண்டும்.

யாத்திராகமத்தில் பதிவு செய்யப்பட்டிருக்கும் இந்த விபரமானது நமது ஆர்வத்தை தூண்டக்கூடிய ஒன்றாகும். இந்தப் பகுதி எபிரேயர்களுக்கு விலையேறப்பட்ட ஒன்றாகும். அது சம்பந்தமாக கொடுக்கப்பட்ட பிரமாணமானது, அந்த

தேசத்தின் வரலாற்றிலேயே ஓர் முக்கிய பகுதியாகும். ஆனால் கிறிஸ்தவர்களைப் பொருத்தமட்டில் இந்த சம்பவத்தின் அர்த்தமானது இன்னும் கூடுதலான மாபெரும் முக்கியத்துவம் வாய்ந்ததாகும். நிறைவேறுதலான இஸ்ரவேலராகிய கிறிஸ்த வனுக்கு அந்த இரவின் முடிவிலும் பஸ்கா நாளின் பகல் தொடங்கும் நேரத்திலும் மோசேயின் கரங்களால் கிடைக்க இருக்கிற விடுதலை ஆகிய அனைத்து சம்பவங்களும் நாம் விவரிக்கிறபடி நிறைவேறுதலான அர்த்தமுடையவைகள் ஆகும்.

நமது பஸ்காவாகிய கிறிஸ்து

"**நம்முடைய பஸ்காவாகிய கிறிஸ்து நமக்காகப் பலியிடப்பட்டிருக்கிறாரே**" என்ற வார்த்தைகள் ஆண்டவராகிய இயேசுவே நிறைவேறுதலான ஆட்டுக்குட்டி எனக் குறிப்பிடுகிறது. மிகவும் சமீபமாய் இருக்கின்ற, நாம் இப்பொழுது நம்பிக்கை யோடு காத்திருக்கிற விடுதலையோடு கூட அவர் கொடுத்த பலியைக் குறிக்கிறது. இந்த விஷயம் எல்லா சபைகளையும் சார்ந்த கிறிஸ்தவர்களாலும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது. நம்முடைய கர்த்தருடைய இராப்போஜனமே நிறைவேறுதலான பஸ்கா ஆராதனை என கத்தோலிக்க சபைகளும் பழைய புரட்டஸ்டண்ட் சபைகளும் ஒப்புக் கொண்டிருக்கின்றன. எபிரேயர்கள் பஸ்கா பண்டிகையை வருடாந்திரமாக கொண் டாடுவது போலவே இந்த சபைகளும் வருடாந்திரமாக "புனித வெள்ளி" என்று கொண்டாடி என்பது அதனை அடையாளப் படுத்தும்விதமாக கர்த்தருடைய இராப்போஜனம் அல்லது "முக்கிய புனித அப்பம்" புசிப்பார்கள். இது கர்த்தருடைய ஆட்டுக்குட்டியின் மரணத்தின் ஞாபகமாகவும் தெய்வீக இரக்கம் "சபையின் முதற்பேறானவர்களுக்கு" தொடர்ந்தேர்ச்சியாய் விரிவுப்படுத்தப்பட்டதை நினைத்து கொண்டாடுவார்கள்.

நாம் பின்னோக்கி சென்று சில காரியங்களையும் ஆவிக்குரிய அல்லது நிறைவேறுதலான இஸ்ரவேலராகிய நமக்குரிய அர்த்தங்களையும் பார்ப்போம். நிசான் மாதத்தின் 10-ஆம் நாள் ஆட்டுக்குட்டியைத் தெரிந்தெடுப்பது என்று நமது ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து தமது முதல் வருகையில் சரியாக நிசான் 10 ஆம் நாள் தமது ஊழியத்தின் முடிவில் கழுதையின் மீது ஏறினவராக யூதர்களின் ராஜாவாக தம்மை இஸ்ரவேலருக்கு காண்பித்தார் என்பதற்கு ஒத்து இருக்கிறது. அப்பொழுது அந்த ஜாதியினர் அவரை ஏற்றுக் கொண்டிருக்க வேண்டும். அவரை அங்கிகரித்திருக்க வேண்டும். அதை அவர்கள் அந்த நேரத்தில் செய்தார்கள். அவர்கள் அவரை வரவேற்றார்கள். சந்தோஷப் பட்டார்கள். தேவனைத் துதித்தார்கள். (லூக். 19 : 37, 38) எவ்வாறு இருப்பினும், அதன் பிறகு தங்கள் முகத்தை அவரைவிட்டுத் திருப்பிக் கொண்டார்கள். அவர்கள் ஓர் தேசமாக அவரிலிருந்த அழகைக் காணத் தவறினார்கள்.

நமது ஆண்டவர் சாயங்கால வேளையிலே தமது சீஷரோடுகூட பஸ்காவில் பங்கு பெற்று, சரியாக நிசான் 14 அன்று தான். அதே இரவின் பிற்பகுதியில் அவர் காட்டிக் கொடுக்கப் பட்டார். அதே நாளின் காலை நேரத்தில் தண்டிக்கப்பட்டு சிலுவையில் அறையப்பட்டார். அதே நாளின் பிற்பகுதியில் கல்லறையில் வைக்கப்பட்டார். இவையெல்லாம் ஒரே நாளில் நிசான் 14-ல் நடந்தேறியது. அதாவது அந்த நாள் துவங்கிய சாயங்காலம் 6 (pm) மணி முதல் அடுத்த 6 pm மணியில் அது முடிந்தது. மறு நாளிலும் அதாவது நிசான் 15-லும் சாயங் காலத்திலும் யூதர்களின் பஸ்கா பண்டிகை கொண்டாடப்பட்டது.

நாம் இந்த பண்டிகையை நிறைவேறுதலாக தொடர்ந்து கொண்டாடி நம்மீது காட்டப்பட்ட தேவ இரக்கத்திற்காக தொடர்ந்து மகிழ்கிறோம். ஆனால் கர்த்தருடைய இராப்போஜனம் நிசான் 14 தான். அது தேவனுடைய ஆட்டுக்குட்டி கொல்லப்படுவதின் ஞாபகார்த்த பண்டிகையாகும். அன்று இரவிலே பஸ்கா புசிக்கப்படுவது என்பது பாவமும் தீமையும் வெற்றிகரமாகவும், இருள் சூழ்ந்திருக்கும் ஓர் இருண்ட காலமாகிய சுவிசேஷ யுகத்தைக் குறிக்கும். அந்த சுவிசேஷ யுகம் என்னும் இரவில் கர்த்தருடைய ஜனங்கள் நமக்காகப் பலியிடப்பட்ட பஸ்கா ஆட்டுக்குட்டியாகிய கிறிஸ்துவின் பலி புண்ணியத்தால் போஷிக்கப்படுகிறார்கள். அவருடைய "**மாம்சம் மெய்யான போஜனமாயிருக்கிறது**" என்பதை உணருகிறார்கள்.

துன்பங்கள், சோதனைகள், கஷ்டங்கள்

யூதர்கள் ஆட்டுக்குட்டியின் மாம்சத்தோடு கூட புளிப்பில்லா அப்பத்தையும் புசித்தார்கள். அது பாவத்திலிருந்து பிரிக்கப்பட்டதற்கு அடையாளமாக சுத்தமானதாயும் கலப்பில்லாத தாயும் இருக்கும். அது நம்முடைய பரலோக பிதாவிடமிருந்து இயேசு கிறிஸ்துவின் மூலம் நம்மிடம் வருகின்ற விலையேறப்பட்ட வாக்குத்தத்தங்களைக் குறிக்கின்றது. "**இதிலே புசிக்கிறவன் மரியாமலிருக்கும்படி வானத்திலிருந்திறங்கின அப்பம் இதுவே**" எபிரேயர்கள் அப்பதையும் ஆட்டுக்குட்டியின் மாம்சத்தையும் புசித்தது போலவே நிறைவேறுதலான ஆவிக்குரிய இஸ்ரவேலர் கிறிஸ்துவின் பலி புண்ணியத்திலும், கிருபையிலும் இலவசமாய் பங்கு பெறுவதைக் குறிக்கிறது. ஆனால் அதோடுகூட கசப்புக் கீரையால் அடையாளப்படுத்தப்படும் கசப்பான உபத்திரவங்கள், சோதனைகள், கஷ்டங்கள், தவறாக குற்றஞ்சாட்டப்படுத்தல், மற்றும் பாடுகள் ஆகியவற்றைப் பெறுவார்கள்.

எபிரேயர்கள் பாதரட்சைகளை அணிந்து காலைப் பிரயாணத்திற்கு தயாராக இருந்தது போலவே சுவிசேஷ யுகத்தின் உத்தம இஸ்ரவேலரும் தாங்கள் இன்னும் எகிப்தில் தான் இருக்கிறோம் என்பதை உணர்ந்து வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட தேசத்திற்காக காத்திருந்து ஆவிக்குரிய அனுகூலங்களில் பங்கு பெறுகிறார்கள். அவர்கள் தங்கள் ஜீவிய நடத்தையின் மூலம் இந்த தேசத்திற்கும் உலகத்திற்கும் பரதேசிகளும் அந்நியருமாய் இருக்கிறதையும் பரம தேசத்திற்காக காத்திருக்கிறார்கள் என்பதையும் குறிப்பிடுகிறார்கள். ஆனால் விடுதலையானது பஸ்கா புசித்த அந்த இரவிலே வரவில்லை. ஆனால் அந்த இரவைத் தொடர்ந்து வந்த காலைப் பொழுதில் விடுதலை ஏற்பட்டது. அதைப் போலவே ஆவிக்குரிய இஸ்ரவேலரின் விடுதலையும் கூட இவ்வுலகத்தின் தேவன் அரசாளும் பாவம் மற்றும் உபத்திரவ இரவில் வரவில்லை. அது ஆயிர வருட யுக காலையில் வரும். அதற்காகவே "**உம்முடைய ராஜ்யம் வருவதாக**" என்று நம்பிக்கையோடு காத்திருந்து ஜெபிக்கிறோம். "**அதிகாலையிலே தேவன் அதற்குச் சகாயம் பண்ணுவார்**" (சங். 46 : 5).

பஸ்கா என்பது நேரடியாகவோ மறைமுகமாகவோ இஸ்ரவேல் புத்திரர் செங்கடலைக் கடக்கிறதைக் குறிக்கிறது எனக் கருதுவது தவறானதாகும். அப்படி எந்தவொரு கருத்தும் இல்லை. பஸ்கா ஆட்டுக்குட்டி புசிக்கப்பட்ட மற்றும் வெளியே நிலைக்கால்களிலும் மேற்சட்டத்திலும் இரத்தம் பூசப்பட்ட அந்த இரவின் போது கடந்து போகுதலையே அதாவது இஸ்ரவேலரின் முதற்பேறானவர்களை காப்பாற்றியதையே பஸ்கா என்ற பெயர் குறிக்கிறது. சங்காரத்தூதன் எகிப்து தேசம் முழுவதும் வந்தான்.

எகிப்தியரின் முதற்பேறானவர் சங்கரிக்கப்பட்டார்கள். இஸ்ரவேலரின் முதற்பேறானவர்களோ காக்கப்பட்டார்கள். அதுவும் அவர்கள் தங்கியிருந்த வீடுகளின் நிலைக்கால்களிலும் மேற்சட்டத்திலும் இரத்தம் தெளிக்கப்பட வேண்டும் என்ற நிபந்தனையினால் காக்கப்பட்டார்கள். இஸ்ரவேலரில் யாரேனும், மோசேயின் மூலம் கூறிய தேவ கட்டளைக்கு கீழ்ப்படியாமல் தங்கள் வீட்டு வாசலில் இரத்த குறிகளை இடாமல் இருந்தால் எப்படி எகிப்தியர் அந்த வாதையினால் துன்பப்பட்டார்களோ அதே போலவே அவர்களும் துன்பப்பட்டிருப்பார்கள். இரத்த அடையாளமே கர்த்தருடைய ஜனங்களுக்கும் அவருடைய ஜனங்களல்லாதவர்களுக்கும் உள்ள வித்தியாசமாக இருந்தது.

ஆவிக்குரிய இஸ்ரவேலரைப் பொறுத்த வரையில் இது எதனைக் குறிக்கிறது. இரத்தம் தெளிக்கப்படுவது என்பது நம்முடைய பஸ்கா ஆட்டுக்குட்டியாகிய இயேசு கிறிஸ்துவின் மீட்கும் பலி புண்ணியம் சாட்டப்படுவதையும் அதின் மேல் விசுவாசமாய் இருக்கிறோம் என்பதின் ஓர் அடையாளமாகவும் இருக்கிறது என்று நாங்கள் பதிலளிக்கிறோம். யாரெல்லாம் இந்த விஷயம் சம்பந்தமாக ஆண்டவருடைய வார்த்தைகளை அங்கிகரிக்கிறார்களோ அவர்கள் இரத்தம் சிந்துதல் இல்லாமல் பாவ மன்னிப்பு இல்லை என்பதை புரிந்து கொள்வார்கள். நமது இரட்சகரின் மரணத்தின் முக்கியத்துவத்தை இவ்விதமாக உணர்ந்தவன், தங்கள் குடியிருப்பின் வெளிப்புறத்தில் தெளிக்கப்பட்ட இரத்தத்தின் மூலம் அடையாளப்படுத்தப்பட்ட அதனை ஒப்புக் கொள்ள வேண்டும் என எதிர்பார்க்கப்படுகிறான். கதவில் இரத்தம் தெளிக்கப்படுவது இரண்டு காரியங்களைக் குறிக்கிறது. (1) விசுவாசிக்கு கிறிஸ்துவின் புண்ணியம் சாட்டப்படுவதையும், (2) யாரெல்லாம் அந்த கதவிற்கு பின்னால் வீட்டிற்குள் இருக்கிறார்களோ அவர்கள் இரத்தத்தின் மேல் நம்பிக்கையுள்ளவர்களாய் இருந்தார்கள். அவர்கள் அதின் பயனளிக்கக்கூடிய புண்ணியத்தின் கீழ் இருந்தார்கள்.

கிறிஸ்துவின் இரத்தத்தின் மூலமே மீட்பு என்ற இந்த உபதேசமானது பல நூற்றாண்டுகளாக சற்றேரக்குறைய தெளிவுடன் பின்பற்றப்பட்டது. ஆனால் இப்பொழுதோ இந்த யுகத்தின் முடிவில் இயேசு கிறிஸ்துவின் பெயரை இன்னும் உபயோகிக்கிற மற்றும் தங்களை முன்னேற்றமடைந்த போதகர்களாகவும் மேலான விமர்சகர்களாகவும் தங்களைக் காட்டிக் கொள்கிறவர்களும் இப்பொழுது கிறிஸ்துவின் இரத்தத்தின் மூலம் தான் மீட்பு என்பதற்கு எதிராக கேள்வி எழுப்புகின்றனர். இப்படிப்பட்டவர்கள் யாவரும் எகிப்தியர்கள் ஆவர், இஸ்ரவேலர் அல்ல. தேவனையும் அவருடைய வார்த்தையையும் மற்றும் நம்முடைய பஸ்காவாகிய கிறிஸ்து இயேசுவின் விலையேறப்பட்ட இரத்தம் சிந்தப்பட்டதின் மூலம் தமது ஜனங்களுக்காக தேவன் செயல்படுத்திய அவரது வேலையையும் ஏற்றுக் கொள்கிறவர்களையே அவரும் தமது ஜனமாக உத்தம இஸ்ரவேலராக ஏற்றுக் கொள்வார்.

ஈடுபலி அடையாளத்தில் காட்டப்பட்டுள்ளது

பகரம் செய்தல் பற்றிய உபதேசம் மிக அழுத்தமாக இந்த அடையாளத்தில் உள்ளது. இரத்தக் குழாய்களில் ஓடிக் கொண்டிருக்கும்போது இரத்தம் ஜீவனைக் குறிக்கிறது. ஆகையால் அது சிந்தப்படுகிறபோது மரணத்தைக் குறிக்கிறது. நமது மனுக்குலத்திற்கு மரண தண்டனை விதிக்கப்பட்டிருக்கிறது. நமது பாவங்களினிமித்தம் கிறிஸ்து மரிக்க வேண்டியது அவசியமாயிற்று. ஆகையால் இந்த யுகம் முழுவதிலும் அதின்மேல் சார்ந்திருக்கும்படியாக அதனை ஏற்படுத்தினார். அதாவது அவரால் ஏற்றுக் கொள்ளப்படுகிற ஒவ்வொருவரும் இயேசு கிறிஸ்துவில் இருக்கும் மீட்பாகிய பாவ நிவாரண பலியில் நம்பிக்கை வைத்து அதனை ஏற்றுக்கொள்ள வேண்டும். இரத்தம் தெளிக்கப்பட்ட வீட்டினுள் இருந்தவர்களின் விசுவாசத்தின் ஆதாரத்தைப்போல் இரத்தமானது ஓர் சின்னமாக, சாட்சியாக அடையாளமாக இருந்தது. தேவன் முதற்பேறானவர்களைக் காப்பாற்றுவார். ஆனால் ஒவ்வொரு முதற்பேறானவனும் அந்த காரியத்தில் தன்னுடைய பங்கு செய்யப்பட்டுவிட்டதா என்று நிச்சயமாக பார்க்க வேண்டும்.

இஸ்ரவேலர் எல்லாரும் மரணத்திற்கான ஆபத்தில் இல்லை. முதற்பேறானவர்களே அந்த ஆபத்தில் இருந்தனர். இதுவே அடையாளத்தின் முக்கியத்துவமான மற்றும் விசேஷமான அம்சமாகும். ஆயிர வருட யுகத்தின் காலைப் பொழுதில் யாரெல்லாம் கர்த்தரையும் நீதியையும் நேசிக்கிறார்களோ அவர்களும் அதாவது முதற்பேறானவர்களும், மீதியான யாவரும் விடுவிக்கப்படுவார்கள். ஆயினும் ஓர் விசேஷ பரீட்சை அல்லது சோதனை ஆயிர வருட யுகத்தின் காலை பொழுதிற்கு முன்னதாக இரவில் வருகிறது. இந்த விசேஷித்த பரீட்சையும் சோதனையும் முதற்பேறானவர்களை மாத்திரமே தாக்கும்.

அடையாளமான முதற்பேறானவர்கள் யாரைக் குறித்துக் காட்டுகிறார்கள்? அவர்கள் யாரைக் குறித்து அடையாளப்படுத்துகிறார்கள் என்றால் பரலோகத்தில் பெயர் எழுதப்பட்டிருக்கிற சபையின் முதற்பேறானவர்களைக் குறிக்கிறார்கள் என்று நாங்கள் பதிலளிக்கிறோம். அவர்கள் பரலோகத்தில் ஆண்டவராகிய இயேசுவோடு கூட இருப்பதற்காக புதிதான சுபாவத்திற்காக ஜெனிப்பிக்கப்பட்ட சிறுமந்தை மற்றும் திரள் கூட்டத்தினர் ஆவர். மற்றவர்கள் சாத்தானின் வல்லமையிலிருந்தும் பாவத்தின் அழுத்தத்திலிருந்தும் விடுவிக்கப்படுவார்கள் என்பது இஸ்ரவேலர் யாவரும் பார்வோனிடமிருந்தும் அவனுடைய வல்லமை மற்றும் அடிமைத்தனத்திலிருந்தும் விடுவிக்கப்பட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. அந்த இரவின் பொழுது ஆபத்தில் இருந்தவர்கள் யாரென்றால் சுவிசேஷ யுகத்தின்பொழுது கடந்து போகப்பட்ட காப்பாற்றப்பட்ட சபையின் முதற்பேறானவர்களாகிய சிறுமந்தையும் திரள்கூட்டமும் ஆவர். இதுவே அந்த அடையாளத்தின் மிகத் துல்லியமான விளக்கமாகும். பஸ்காவிற்கு பிற்பாடு காரியங்களின் புதிய ஒழுங்கில் இந்த பஸ்காவில் காக்கப்பட்ட இந்த முதற்பேறானவர்கள் லேவியர்களை அடையாளப்படுத்துகிறவர்கள் ஆனார்கள்.

ஏற்கனவே குறிப்பிட்டபடி பஸ்கா ஆட்டுக்குட்டியானது நமக்காக அடிக்கப்பட்ட பஸ்கா ஆட்டுக்குட்டியாகிய கிறிஸ்துவை அடையாளமாக காட்டுகிறது. மாம்சமான இஸ்ரவேலரால் வருடந்தோறும் கொண்டாடப்படும் அடையாளமான பண்டிகையின் இடத்தில் இந்த ஞாபகார்த்த ஆராதனையை நமது கர்த்தர் ஏற்படுத்தினார். ஓர் யூதனாக அவர் பஸ்காவை புசித்த அன்று இராத்திரியிலே அந்த பஸ்காவைப் புசித்த பின்னர் அவர் காட்டிக் கொடுக்கப்பட்ட அந்த இராத்திரியிலே அவர் இந்த ஞாபகார்த்த ஆசரிப்பை ஏற்படுத்தினார். உலகத்தின் பாவங்களை நீக்கிப் போடும் உண்மையான நிறைவேறுதலான தேவ ஆட்டுக்குட்டியாக தம்மையே குறிப்பிடுவதற்காக அவர் அப்பத்தையும் திராட்சை ரசத்தையும் எடுத்தார்.

ஆண்டவர் தமது உண்மையான சீஷர்கள் தங்களுடைய பங்காக யூதர்களின் அடையாளமான பஸ்காவைக் கொண்டாடுவதற்குப் பதிலாக நிறைவேறுதலாகிய பஸ்காவை ஆசரிக்க வேண்டும் என்று அறிவுறுத்தினார். "**நீங்கள் இதைப் பானம் பண்ணும்போதெல்லாம்** (பஸ்கா கொண்டாடும் போதெல்லாம்) **என்னை நினைவு கூரும்படி செய்யுங்கள்.**" (நிழல் அடையாளமான விடுதலையைக் குறித்து இனி நினைவு கூற வேண்டியதில்லை). இப்படியாக இந்த ஞாபகார்த்தம் வருடா வருடம் ஆசரிக்கப்பட்டு இப்பொழுது நம் நிகழ் காலத்திற்கு வந்துள்ளது.

எனினும் தேவனுடைய ஜனங்களில் சிலர் இந்த பாடத்தைக் குறித்து குழப்பமடைந்து உள்ளனர். இந்த ஞாபகார்த்த ஆசரிப்பானது வருடந்தோறும் கொண்டாடப்படும் யூதர்களின் பஸ்காவின் நிறைவேறுதலான ஆசரிப்பு என்னும் விஷயத்தின் கருத்தை அறிவதற்கு தவறிப்போய் விட்டு தேவனிடமிருந்து எவ்விதமான அதிகாரத்தையும் பெறாமல் தங்களுக்குப் பிரியமான நேரங்கள் காலங்களில் அதனை ஆசரிப்பதற்கு சுதந்திரம் இருக்கின்றது எனக் கருதுகின்றனர். அப்படிப்பட்டவர்கள் ஓர் குறிப்பிட்ட அளவில் மன்னிக்கப் படத்தக்கவர்களே. இந்த ஞாபகார்த்த ஆசரிப்பு நிறுவப் பட்டதிலிருந்து பத்தொன்பது நூற்றாண்டுகளாக இயேசுவின் பின்னடியார்களின் மத்தியிலும் மற்றவர்கள் மத்தியிலும் அநேக தப்பறையான உபதேசங்களையும் தவறான பழக்கங்களையும் திருப்பலி பூசை (Mass -மாஸ்) என்ற உபதேசத்தையும் மாபெரும் எதிராளியானவன் அறிமுகப்படுத்தினான். மாஸ் என்பதின் அர்த்தம் என்னவென்றால் கிறிஸ்துவை மீண்டும் மீண்டும் பலியிடுவது என்பதாகும். கிறிஸ்துவை மறுபடியும் மாம்சமாக சிருஷ்டித்து அவரை மீண்டும் பலியிடும் வேலையானது குருமார்களால் செயல்படுத்தப்பட்டது. அவர்கள் திருப்பலி பூசையில் மீண்டும் புதிதாக அவரை பலியிடுவதாகவும் அது பாவம் செய்தவர்கள் நிமித்தமாக இந்த மாஸ் நிறைவேற்றப்படுவதாகவும் கூறுகின்றனர்.

புரட்டஸ்டண்டு சபையார் போப்பு மார்க்கத்தை விட்டு வெளியே வந்த பிற்பாடு இந்த திருப்பலி பூசை உபதேசத்தை நீக்கினார்கள். ஆனால் இந்த மாஸ் என்ற திருப்பலி பூசையை அதற்கு முன்னே அவர்கள் தொடர்ந்தேர்ச்சியாய் அடிக்கடி செய்து வந்தபடியால் அவர்கள் கர்த்தருடைய இராப் போஜனத்தையும் அதை போலவே, எவ்விதமான காலம் மற்றும் நேரம் போன்ற எவ்வித கட்டுபாடும் இல்லாமல் முன்பு அதனை கொண்டாடியது போலவே கொண்டாடலாம் என்று நினைத்து கொண்டனர். மேலும் பஸ்கா நாளில் கர்த்தருடைய இராப் போஜனத்தை ஆசரிக்கும் அத்தகைய பழைய சபைகளும்கூட அதனை புதிய விதத்தில் கணக்கிடும் முறைமைக்கு மாறிவிட்டனர். இந்த முறையானது நமது கர்த்தரால் உபயோகிக்கப்பட்ட முறைமைக்கு மாறான ஒன்றாகும். அது எப்படி அவர்கள் கணக்கிடுகிறார்கள் என்றால், அந்த ஞாபகார்த்த நாளானது எப்பொழுதும் உண்மையான தேதிக்கு மிக அருகில் இருக்கும் வெள்ளி கிழமையைத் தேர்ந்தெடுத்து அதையே நிர்ணயிக் கின்றனர். அதனை தொடர்ந்துவர கூடிய ஞாயிற்றுகிழமை நமது கர்த்தரின் உயிர்த்தெழுதலின் வருடாந்திர நாளாக ஈஸ்டர் கொண்டாடும்படி குறிக்கப்பட்டது.

இந்த மகிமையான ஞாபகார்த்தத்தின் முக்கியத் துவத்தை நாம் அதிகமதிகமாக உணர்ந்து கொள்வோமாக! இந்த ஞாபகார்த்தத்தில் அதிகமதிகமாக வெளிப்படுத்தப்பட்டுள்ள எல்லா அன்பிற்கும் மேலான தெய்வீக அன்பைப் பார்க்கும்போது நாம் அதிகமதிகமாக அதனை மதித்துணர வேண்டும். அந்த அன்பின் நீளம், அகலம், உயரம், ஆழமானது எல்லாவிதமான மனுஷீக புரிந்து கொள்ளுதலுக்கும் மிகவும் மேலானதாகும்.

மேற்கூறிய விஷயங்களையும் எஜமானருடைய நாமத்தில் நாம் செய்ய இருக்கும் காரியத்தின் முக்கியத்து வத்தையும், யூதர்கள் அடையாளமான சம்பவத்தை நினைவு கூறுவதை போல் அல்லாமல், "**என்னை நினைவுகூரும்படி இதைச் செய்யுங்கள்**" என்ற எஜமானரின் வார்த்தைகளை ஏற்றுக் கொள்கிற தேவனுடைய ஜனத்தை அதை ஆசரிக்கும்படி கூறுகிறோம். பவுல் அப்போஸ்தலர் கூறியபடி "**ஆகையால் நீங்கள் இந்த அப்பத்தைப் புசித்து, இந்த பாத்திரத்தில் பானம் பண்ணும்போதெல்லாம் கர்த்தர் வருமளவும் அவருடைய மரணத்தைத் தெரிவிக்கிறீர்கள்.**" (1 கொரி. 11 : 26) .

***

Visit us at : www.biblestandardindia.com

ஒசூர் கன்வென்ஷன் 2011

ஏப்ரல் 22, 23

இந்த கன்வென்ஷனில் கலந்து கொண்டு தங்கள் பிரதிஷ்டையை புதுப்பித்துக் கொண்ட சகோதர, சகோதரிகள் யாவரையும் தேவன் ஆசீர்வதிப்பாராக. சங். 133.

இந்த ஊழியத்தில் பங்குபெற்ற மற்றும் உதவி செய்த சகோதர, சகோதரிகள் யாவரையும் தேவன் மிகுதியாக ஆசீர்வதிப்பாராக. நீதி. 11 : 26, 25: 2 கொரி. 9 : 6, 7, 8.

For English Magazines, Volumes & Translated Tamil Magazines Contact :

Bro. V. Vincent Jeyakumar

Laymen's Home Missionary Movement

32-D, Dr.Solomon Compound, Near Railway Gate, Nazareth - 628 617

Thoothukudi District, Tamil Nadu, India.

E-mail ID : vincent.v31@gmail.com

Cell : 98949 26629

FOR PRIVATE CIRCULATION ONLY